ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1720/42 - 2011 අගෝස්තු 26 වැනි සිකුරාදා - 2011.08.26

*1720/ 42 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 15/79.*

### *1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் –*

*(அ) மேற்கூறப்பட்ட சட்டம் குறித்துரைக்கப்பட்ட எந்தத் துறைமுகத்திற்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்தக் குறித்துரைக்கப்பட்ட துறைமுகமொன்றாகவிருக்கும் திருகோணமலை துறைமுகத்தின் எல்லைக்கோடுகள், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு உடன்முந்திய திகதியன்று எந்த எல்லைக்கோடுகள் இதுவரை அத்தகைய துறைமுகத்தின் எல்லைக்கோடுகளாக இருந்தனவோ அந்த எல்லைக் கோடுகளாகும் என வெளிப்படுத்துகின்றேன் ;*

*(ஆ) திருகோணமலை துறைமுகத்தின் எல்லைக்கோடுகள் இக்கட்டளை ஆக்கப்படும் திகதியிலிருந்து அத்தகைய கட்டளையின் அட்டவணை* II *இல் நிர்ணயிக்கப்பட்ட நீர்ப்பரப்பைப் புறநீக்கம் செய்திருத்தல் வேண்டும் என இக்கட்டளையால் தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை I**

*திருகோணமலை துறைமுகத்தின் எல்லைக்கோடுகள்*

*(அ) பின்வரும் நிலையில் கோறல் புள்ளியில் உயர் நீர் அடையாளக் குறியிற் தொடங்கி ;*

*அகலப்பாங்கு : $08^0$ 29.8 வடக்கு*
*நீளப்பாங்கு : $081^0$ 21.2 கிழக்கு*

*(ஆ) அதிலிருந்து, கோறல் முனையிலிருந்து பின்வரும் நிலையிலுள்ள "A"முனைவரை வடக்கு நோக்கி நேர்க் கோடொன்றை வரையவும் ;*

*அகலப்பாங்கு : $08^0$ 33.0 வடக்கு*
*நீளப்பாங்கு : $081^0$ 21.2 கிழக்கு*

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

(இ) மேலேயுள்ள புள்ளி 'A' யிலிருந்து 301 திசையை நோக்கி (சரியான) பின்வரும் நிலையில் எலிசபெத் முனையில் உயர் நீர் அடையாளக் குறிவரை நேர்க் கோடொன்றை வரையவும் :

அகலப்பாங்கு : $08^0$ 37.65 வடக்கு
நீளப்பாங்கு : $081^0$ 13.6 கிழக்கு

(ஈ) அதிலிருந்து எலிசபெத் முனையில் உயர் நீர் அடையாளக் குறி வழியாக (கரையோரம் வழியாக) திருகோணமலை துறைமுகத்தையும் தம்பலகாமம் விரிகுடாவையும் கொட்டியார் விரிகுடாவையும் திருகோணமலை விரிகுடாவையும் பேக் விரிகுடாவையும் சூழ்ந்திருக்கும் கோறல் முனைவரையும் ;

**அட்டவணை** II

திருகோணமலை துறைமுகத்தின் எல்லைக்கோட்டிலிருந்து புறநீக்கம் செய்யப்பட்ட நீர் இடப்பரப்பின் எல்லைக்கோடுகள்

(அ) 'ரொக்கி' முனையிற் தொடங்கி பின்வரும் நிலையில்

அகலப்பாங்கு : $08^0$ 33.55 வடக்கு
நீளப்பாங்கு : $081^0$ 14.66 கிழக்கு

(ஆ) கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து பின்வரும் நிலையில் "செப்பல் ரொக்" வரை

அகலப்பாங்கு : $08^0$ 32.85 வடக்கு
நீளப்பாங்கு : $081^0$ 15 கிழக்கு

(இ) கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து பின்வரும் நிலைக்கு

அகலப்பாங்கு : $08^0$ 31.79 வடக்கு
நீளப்பாங்கு : $081^0$ 13.76 கிழக்கு

(ஈ) கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நிலையிலிருந்து 'எலிபன்ட் பொயின்ட்' ஊடாக ஒஸ்டென்பேர்க் புள்ளி வரை

(உ) 'ஒஸ்டென்பேர்க்' புள்ளியிலிருந்து பின்வரும் நிலை வரை

அகலப்பாங்கு : $08^0$ 33.22 வடக்கு
நீளப்பாங்கு : $081^0$ 13.04 கிழக்கு

(ஊ) கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து பின்வரும் நிலையில் "பெப்பர் பொட்" இறங்குதுறையின் தலைவரை.

அகலப்பாங்கு : $08^0$ 33.67 வடக்கு
நீளப்பாங்கு : $081^0$ 13.84 கிழக்கு

(எ) அதிலிருந்து 'பெப்பர்பொட்' இறங்குதுறை வழியாக கடற்கரைக் கோட்டில் இறங்குதுறைத் தளத்திலுள்ள உயர் நீர் அடையாளக் குறிவரை.

(ஏ) அதிலிருந்து கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து கடற்கரைக் கோட்டில் உயர் நீர் அடையாளக் குறி வழியாக விடயம் (அ) என்பதில் தரப்பட்டுள்ளவாறு "ரொக்கி முனை" வரை.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2011, ஓகத்து 17.

9 - 336

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.